# சத்தியம்

**செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிட் தியான மையத்தில் நாம் அடைந்த சாதனைகள்:-**

- தியானம் கற்றுக்கொள்ள 100க்கும் மேற்பட்ட புதிய தியானிகள் வருகை தந்தனர்.
- ஒவ்வொரு சனிக்கிழமையும், இதுவரையில் 17க்கும் மேற்பட்ட சத்திய தரிசன வகுப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.
- ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெற்ற சத்திய தரிசனத்தில் அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.
- செங்கல்பட்டில் பிப்ரவரி 15 ஆம் தேதி, 2025 அன்று நடைப்பெற்ற முதல் இலவச தியான வகுப்பில் 104 தியானிகள் கலந்து கொண்டனர்.

## பத்ரிஜியின் செய்திகள்

## "இரண்டு வகையான பேச்சுக்கள்"

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் !
ஆன்மாவின் அழகு வார்த்தைகளில் புரியும் !



முகம் எப்பொழுதும் மனதின் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கின்றது.
வார்த்தைகள் எப்பொழுதும் ஆன்மாவின் நிலையைப் பிரதிபலிக்கின்றன.




இரண்டு வகையான பேச்சுக்கள் உள்ளன :
கவனக்குறைவான,
அறியாத மற்றும் அறிவியலற்ற பேச்சுக்கள்,
கவனமான, விழிப்புணர்வு மிக்க மற்றும்
அறிவியல் சார்ந்த பேச்சுக்கள்.

கவனமான,
விழிப்புணர்வு மிக்க
மற்றும் அறிவியல்
சார்ந்த பேச்சுக்கள்
மட்டும்.

மனிதனுக்கு இரண்டு வகையான மனங்கள் உள்ளன :
உணர்வு மனம் (conscious mind), ஆழ்மனம் (subconscious mind)

"உணர்வு மனம்" என்பது தற்போதைய வாழ்க்கையில் உள்ள உடலால் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளின் ஒட்டுமொத்தமான மற்றும் இறுதி விளைவாகும்.

"ஆழ்மனம்" என்பது கடந்த கால வாழ்க்கையில் இருந்த, அனைத்து உடல்களாலும் நடைபெற்ற செயல்பாடுகளின் ஒட்டுமொத்தமான, பதிவு செய்யப்பட்ட இறுதி விளைபொருளாகும்.

உணர்வு மனம் என்பது ஒருவரின் முழுமையான மனநிலையில்,
அவருடைய பங்கு, பத்தில் ஒன்றாக இருக்கும்.
ஆழ்மனம் என்பது ஒருவரின் முழுமையான மனநிலையில்,
பத்தில் ஒன்பதாக இருக்கும்.

கவனக்குறைவான, விழிப்புணர்வில்லாத மற்றும் அறிவியலற்ற பேச்சுக்கள் எப்பொழுதும் உணர்வு மனதின் குறுகிய தன்மையையும், ஆழ் மனதின் குறைபாடுகளையும் வலுப்படுத்துகிறது.

கவனமான, விழிப்புணர்வு மிக்க மற்றும் அறிவியல் பூர்வமான பேச்சுக்கள் எப்பொழுதும்
உணர்வு மனம் மற்றும் ஆழ் மனதை சரி செய்து,
அதன் மூலம் ஒரு நபரை சுதந்திரமாக செயல்பட வைக்கின்றது.

இவ்வாறு மொத்த மனமும் சரிசெய்யப்படும் பொழுது, மனிதன் முழுமையான விடுதலை பெறுகின்றான். ஆகவே, நாம் எப்பொழுதும் கவனமான, விழிப்புணர்வு மிக்க மற்றும் அறிவியல் பூர்வமான பேச்சுக்களையே பிறரிடம் பேசவும், கற்றுக் கொடுக்கவும் வேண்டும்!

-- பிரம்மர்ஷி பத்ரிஜி

## "நாம் ஆன்மாக்களே"

"நாம் அனைவரும் ஆன்மாக்கள்" என்பது
ஆன்மிகத்தில் உள்ள மிகப்பெரிய உண்மையாகும்.
தியானம் செய்வதன் மூலம் தான்
இந்த உண்மையைப் புரிந்து கொள்கிறோம்.

நாம் தொடர்ந்து தியானம் செய்யும் போது,
நம்மை நாம் ஆன்மாக்களாகப் பார்க்கின்றோம்,
மேலும் ..
நாம் இந்த உடல் மட்டுமல்ல,
மரணத்திற்கு முன்னும் பின்னும் நாம் இருக்கின்றோம்,
இறப்பிற்கு முன் உள்ள வாழ்க்கை மற்றும்
பௌதீக உடலின் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை,
அறிவியல் சாராத சிந்தனையுடன் கூடிய வாழ்க்கை மற்றும்
அறிவியல் சிந்தனையுடன் கூடிய வாழ்க்கை,
தியானத்திற்கு முந்தைய வாழ்க்கை மற்றும்
தியானத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை,
ஞானோதயத்திற்கு முந்தைய வாழ்க்கை மற்றும்
ஞானோதயத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை,
என்று எல்லாவற்றையும் நாம் உணர்கின்றோம்.

ஞானோதயத்திற்கு பின்,
நாம் அனைவரும் கடவுள்கள்,
இந்த உடலை மனித நிலையில் இருந்து அனுபவங்களைப் பெறுவதற்காகத்
தேர்ந்தெடுத்துள்ளோம்,
"நாம் அனைவரும் ஆன்மாக்கள்" என்பதை
நாமும் உணர்ந்து, மற்றவர்களையும் உணர வைக்கிறோம்.

தியானம் தான் நம்மை ஆன்மாவாகப் பார்ப்பதற்கான வழி.
மற்றவர்களும் தங்களை ஆன்மாவாகப் பார்க்க உதவுவது
மிக முக்கியமான ஆன்மிக சேவை.

அனைவருக்கும் தியானத்தைக் கற்பிப்போம் !
அனைவரையும் ஆன்மாக்களாகப் பார்ப்போம் !!
மற்றும் அனைவரையும் கடவுளாகவும் பார்ப்போம் !!!
* * *





பாலாஜி டோன்தி
மெடிடேஷன் கோச்,
மேனேஜிங் டிரஸ்ட்டி,
சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்

வணக்கம் நண்பர்களே,

தமிழ்நாட்டில் உள்ள செங்கல்பட்டில் எங்கள் முதல் தியான மையம், அக்டோபர் 2024 இல் தொடங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இதன் முக்கிய நோக்கம் தியானத்திற்கென ஒரு பிரத்தியேக இடத்தை அமைத்து, அதில் அனைவருக்கும் தியானத்தைக் கற்பிப்பது ஆகும். இன்று போகர் பிரமிடு தியான மையம் ஆறு மாத சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. ஒவ்வொரு சனிக்கிழமையும் வழக்கமாக "சத்திய தரிசனம்" வகுப்புகள் நடைபெறும். இவ்வகுப்பில் 90 நிமிட தியானமும், 60 நிமிட ஆன்மிக சொற்பொழிவும் அதைத்தொடர்ந்து அனைவருக்கும் இலவச உணவு வழங்கப்படுகின்றது. எங்கள் மையத்தில் தினசரி நடக்கும் இலவச தியான வகுப்புகளில் எங்களுடன் சேர தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இங்கு தியானமும், ஆன்மிக சொற்பொழிவுகளும் முற்றிலும் இலவசமாக வழங்குகின்றோம்.

இந்த தியான மையத்தில் ஆன்மிக சத்சங்கத்தை இலவசமாக வழங்க தொடர்ந்து வாய்ப்பை அளித்து, ஆதரவு அளித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

- பாலாஜி டோன்தி
மெடிடேஷன் கோச், மேனேஜிங் டிரஸ்ட்டி, சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்

# “பிரமிடுகளின் பேராற்றல்”



## பிரமிடின் வடிவமைப்பு

பிரமிடு என்பது நான்கு முக்கோணங்களுடன், நான்கு சாய்வு பக்கங்கள் உடைய ஒரு சதுர அடித்தளம் கொண்ட திட அமைப்பாகும்.

மேலும் முக்கோணங்களுடைய நான்கு நுனிகளும் ஒரு புள்ளியில் இணைந்து பிரமிடின் உச்சியை உருவாக்குகின்றது. பிரமிடில் உள்ள ஒவ்வொரு முக்கோணமும் ஓர் இரு சம பக்க முக்கோணமாகும். அதாவது இரண்டு சாய் பக்கங்கள் சமம் மற்றும் அடித்தள கோணமும் சமமாக இருக்கும். பிரமிடில், ஒத்த பக்கங்களின் நீளம் மற்றும் பரப்பளவு சமம். மேலும் அவை ஒன்றுக்கொன்று சமச் சீரானவையாக இருக்கும்.

## ஆற்றல் சேமிப்புக் கிடங்குகள்

பிரமிடுகள் என்பது பிரபஞ்சத்திலிருந்து பெறப்பட்ட ஆற்றல் சேமிப்புக் கிடங்குகள் என்று எகிப்தியர்கள் அறிந்திருந்தனர். பிரமிட் ஆற்றலானது, கதிர்வீச்சு கொண்ட பிரபஞ்ச ஆற்றல், பூமியின் ஈர்ப்பு விசையுடன் இணைவதன் மூலம் பெறப்படுகின்றது.



கிசா எனப்படும் மிகப்பெரிய பிரமிடு, உணர்வு உடலுக்கு வெளியே இயக்கங்களின் மூலம் பெறப்பட்ட அனுபவங்களை மாற்றி, ஓர் உயர்ந்த உணர்வு நிலையைத் துவக்குவதற்கான ஒரு கருவியாகக் கட்டப்பட்ட இடம் என்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்கள்.

## பிரமிடின் சக்தியைப் பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள்



“பிரமிடில் தியானம் செய்தால், தியானத்தின் பலன் மூன்று மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும். பூதக் கண்ணாடியின் வழியாக சூரியக் கதிர்கள் பாய்ந்தால், அந்த சூரியக் கதிர்கள் மையம் கொண்டு அதன் கீழ் இருக்கும் தாள் எறிவது போல, பிரமிட் கட்டமைக்கப்பட்டால் அதில் உள்ள பிரபஞ்ச ஆற்றல் மூன்று மடங்கு அதிகரித்து, அந்த இடமெல்லாம் சக்தி மையமாகப் பூத்துக் குலுங்கும். பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஆனந்தமான, ஆத்மார்த்தமான மற்றும் ஆரோக்கியமான வாழ்வை அடைய வேண்டும். இதுவே பிரமிட் ஆன்மிக மன்ற இயக்கத்தின் மற்றும் பிரமிடு ஆசான்களின் தனித்துவமான இலக்காகும்.” – பத்ரிஜி



“ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சிறுவர்-சிறுமிகளுக்கும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு கல்லூரியிலும் பிரமிட் தியானம் ஒரு பழக்கமாக மாறினால் 300 வருடங்கள் வரை ஆயுள் பெறலாம். பிரமிடில் தினமும் ஒரு மணி நேரம் அமர்ந்தால் அதுவே நம்மைக் காப்பாற்றும். பிரமிடுக்குள் தியானம் செய்தால் ஆழ்ந்த தியான அனுபவம் கிடைக்கும்.” - ஓஷோ



“பிரமிடில் தியானம் செய்வதினால், பிரபஞ்ச ஆற்றலை மூன்று மடங்கு அதிகமாகப் பெறுவோம். தியானம் வெளியில் செய்வதற்கும், பிரமிடில் செய்வதற்கும் ஏராளமான வித்தியாசம் இருக்கும். பிரமிட் தியானத்தினால் ஆயிரக்கணக்கானோருக்கு மருந்துகளின்றி நோய்கள் குணமாகும் என்பது சத்தியம். பிரமிடில் சூட்சும உடலின் பயணம் எளிமையாக நடக்கும்.” - மேடம் ஸ்வர்ணமாலா பத்ரிஜி

“கிசா பிரமிடில் ஓர் இரவு முழுவதும் தியானம் செய்யும் பொழுது சூட்சும உடல் பயணம் மிக சுலபமாக நடைபெற்றது.” - டாக்டர் பால் பிரண்டன்

# ஃபவுண்டேஷன் செயல்பாடுகள்

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் அனைவருக்கும் தியானம் கற்பிப்பதற்காக அமைக்கப்பட்டது. தற்போது, ஃபவுண்டேஷன் தனது செயல்பாடுகளை செங்கல்பட்டு மாவட்டத்தில் கவனம் செலுத்தி வருகிறது. வாராந்திர வகுப்புகள், பொது நிகழ்வுகள் மற்றும் ஆன்மிக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் சமூகத்தில் உள் அமைதி மற்றும் விழிப்புணர்வு வளர்க்கப்படுகிறது. ஆன்மிக ரீதியாக சுய உணர்தல் மற்றும் சேவையில் வேரூன்றிய ஒரு சமூகத்தை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள் ஆகும்.

**ஜனவரி முதல் மார்ச் 2025 வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது:**










*4 ஜனவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-7 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் ஏழாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. போகர் பிரமிடு தியான மையத்தின் 2025 ஆம் ஆண்டின் காலண்டர் திரு வி. வி. ஜி ராஜு மற்றும் என். எஸ். லட்சுமி ஆகியோரால் வெளியிடப்பட்டது என்பதைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.






*11 ஜனவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-8 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் எட்டாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.






*18 ஜனவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-9 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் ஒன்பதாவது அத்தியாயம், பிரமிடு ஆசான் திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.






25th ஜனவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-10 மற்றும் அன்னதானம்

சத்திய தரிசனத்தின் பத்தாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.






1 பிப்ரவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-11 மற்றும் அன்னதானம்

சத்திய தரிசனத்தின் பதினொன்றாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## 15 பிப்ரவரி 2025:
## செங்கல்பட்டில் இலவச தியான அமர்வு

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் தனது முதல் இலவச தியான வகுப்பைச் செங்கல்பட்டில் பிப்ரவரி 15ஆம் தேதி, 2025 அன்று பொது மக்களுக்காக நடத்தியது. இந்நிகழ்ச்சியில் 2 மணி நேர, நேரடி இசை நிகழ்ச்சியுடன் தியானம் நடைபெற்றது. ஊக்கமளிக்கும் ஆன்மிகச் செய்திகள் தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்களால் வழங்கப்பட்டது. மூத்த பிரமிடு ஆசான்கள், அவர்களது ஞானத்தையும் மற்றும் தியான அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி அன்னதானத்துடன் முடிவடைந்தது. சுமார் 105 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

















   

*22 பிப்ரவரி 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-12 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பன்னிரெண்டாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

   

*1 மார்ச் 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-13 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பதிமூன்றாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

   

*8 மார்ச் 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-14 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பதிநான்காவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது

   

*15 மார்ச் 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-15 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பதினைந்தாவது அத்தியாயம். பிரமிடு ஆசான் என்.எஸ்.லட்சுமி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

   

*22 மார்ச் 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-16 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பதினாறாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.






*29 மார்ச் 2025: சத்திய தரிசனம், அத்தியாயம்-17 மற்றும் அன்னதானம்*

சத்திய தரிசனத்தின் பதினேழாவது அத்தியாயம். தியானப் பயிற்சியாளர் திரு. பாலாஜி டோந்தி அவர்கள் தலைமை தாங்கினார். 90 நிமிட ஆழமான தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து, அனைவருக்கும் தியானப் பயிற்சி மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வளமான அனுபவத்தை வழங்குவதோடு, அங்கு வந்திருந்த அனைத்து தியானிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## தியான அனுபவங்கள்

### "நோயிலிருந்து மன அமைதி: பிரமிட் தியானத்தின் மூலம் மாறிய வாழ்க்கை"

என் பெயர் கிருஷ்ணமூர்த்தி, 61 வயது, செங்கல்பட்டைச் சேர்ந்தவர். நான் 40 வருடங்களாக ஆன்மிகப் பாதையில் இருக்கிறேன். சமீபத்தில், ஒரு தியான துண்டுப்பிரசுரத்தின் மூலம், போகர் பிரமிட் தியான மையத்தில் தியானம் செய்யத் தொடங்கினேன்.



ஒரு மாதத்திற்குள், நேர்மறையான எண்ணங்கள், உள் அமைதி மற்றும் தெளிவான மனம் ஆகியவற்றைக் கவனிக்க ஆரம்பித்தேன். நான் எதைப் பற்றி நினைத்தாலும், அது இயற்கையாகவே நடக்கத் தொடங்குகிறது. தியானத்தின் போது என் புருவங்களுக்கு மத்தியில் ஓர் ஊதா நிற ஒளியை உணர்கிறேன், மேலும் என் மூச்சில் கவனம் செலுத்துவதன் மூலம் என் மனம் அமைதியாகிறது. எனக்கு நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், மற்றும் பக்கவாதம் இருந்தது. ஆனால் ஒரு மாத தியானத்திற்குப் பிறகு, மருந்துகள் எடுக்காமல் என் உடல்நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. நான் எந்தவிதமான அசௌகரியத்தையும் உணரவில்லை. என் உடல்நிலை நன்றாகி வருவதாக மருத்துவர் உறுதிப்படுத்தினார். நமது எண்ணங்கள் நமது வாழ்க்கையை வடிவமைக்கின்றன என்பதை நான் இப்போது புரிந்துகொண்டேன். நான் தொடர்ந்து தினமும் தியானம் செய்தால், நிச்சயமாக இன்னும் அதிக மாற்றத்தை அனுபவிப்பேன் என்று நம்புகிறேன். தியானம் எனக்கு நம்பிக்கை, அமைதி மற்றும் வாழ்க்கையில் புதிய சக்தியை அளித்துள்ளது. அனைவரும் இந்த தியானத்தை செய்ய வேண்டும். கண்களை மூடிக்கொண்டு உங்கள் மூச்சைக் கவனியுங்கள். மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள். நன்றி!

- கிருஷ்ணமூர்த்தி, செங்கல்பட்டு

### "பிரமிட் ஆற்றலின் சக்தியைக் கண்டுபிடித்தேன்"

நான் செங்கல்பட்டைச் சேர்ந்த லலிதா. நான் டிசம்பர் 17, 2024 அன்று பிரமிட் தியானத்தில் சேர்ந்தேன். அன்று முதல் தொடர்ந்து தியானம் செய்து வருகிறேன். பிரமர்ஷி பத்ரிஜிக்கு வணக்கங்கள் மற்றும் போகர் பிரமிட் தியானத்தைத் தொடங்கி, நடத்தி வரும் பாலாஜி மாஸ்டர் மற்றும் ஸ்ரீனிவாசன் மாஸ்டருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பிரமிடின் ஆற்றலைப் புரிந்துகொள்ள, நான் பச்சைப் பயறை வைத்து ஒரு எளிய பரிசோதனை செய்தேன். பிரமிடுக்குள் வைத்திருந்த தண்ணீரையும் வெளியே வைத்திருந்த தண்ணீரையும் பயன்படுத்தி அதே அளவு பச்சைப் பயறை ஊறவைத்தேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு, இரண்டும் முளைத்தன, ஆனால் பிரமிடுக்குள் இருந்த பயறு புதியதாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது, அதே நேரத்தில் வெளியே இருந்த பயறு மந்தமாகத் தெரிந்தது. மேலும் நான்கு நாட்களுக்குப் பிறகு, பிரமிடிலிருந்து வந்த முளைகள் இன்னும் சுவையாகவும் புதியதாகவும் இருந்தன. ஆனால் வெளிப்புற முளைகள் கெட்டுப் போயிருந்தன.

அடுத்ததாக, ஓர் ஆப்பிளைப் பத்து நாட்களுக்குப் பிரமிடுக்குள் வைத்தேன். அது சுருக்கங்கள் இல்லாமல், புதியதாக இருந்தது. மேலும் அருமையான சுவையுடன் இருந்தது. குளிர்சாதன பெட்டியில் வைத்திருந்ததை விட இது மிகவும் நன்றாக இருந்தது.

இந்த சோதனைகள் மூலம், பிரமிடு ஆற்றலின் சக்தியை நான் தனிப்பட்ட முறையில் உணர்ந்தேன். அனைத்து குருமார்களுக்கும் நான் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், இந்த தியானப் பயணத்தில் நானும் ஒரு பகுதியாக இருப்பதைப் பாக்கியமாகக் கருதுகின்றேன். நன்றி!

-லலிதா ராமதாஸ், செங்கல்பட்டு

### “பிரமிடு தியானத்தில் என் 20 வருட அனுபவம்”

என் பெயர் என். எஸ். லட்சுமி, செங்கல்பட்டு, நெமிலியைச் சேர்ந்தவர். நான் 20 வருடங்களாக பிரமிட் தியானம் அதாவது, ஆனா பானாசதி தியானம் செய்து வருகின்றேன். இந்த தியானத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியதற்காக பிரம்மரிஷி பத்திரிஜி அவர்களுக்கும் மற்றும் ஸ்வர்ணமாலா பத்திரிஜி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



சமீபத்தில் நான் நிலக்கடலையில் பிரமிடு வைத்து ஒரு பரிசோதனை செய்தேன். நான் அவற்றை இரவு முழுவதும் ஊற வைத்து, அவற்றின் ஒரு பகுதியை பிரமிடின் கீழ் 12 மணி நேரம் வைத்தேன், மற்றொரு பகுதியை வெளியே வைத்தேன். இரண்டுமே முளைத்திருந்தன. ஆனால் வித்தியாசம் தெளிவாக இருந்தது. பிரமிடில் இருந்த முளைகள் இனிமையாகவும், சுவையாகவும் இருந்தன. நான்கு நாட்களில் அவற்றில் பெரிய வேறுபாட்டை என்னால் உணர முடிந்தது. பிரமிட் தியானம் மூன்று மடங்கு அதிக ஆற்றலை அளிக்கிறது என்பதை இச்சோதனையின் மூலம் அறிந்து கொண்டேன்.

ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்க, அனைவரும் தவறாமல் தினமும் பிரமிடு தியானம் செய்யுங்கள். நன்றி !

-என். எஸ். லட்சுமி, செங்கல்பட்டு

## சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் பற்றிய விவரம் :

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் பிரம்மரிஷி பத்ர்ஜியின் உத்வேகத்தால் நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளை தியானம், அறிவியல் ஆன்மிகம், பிரமிட் சக்தியின் விழிப்புணர்வு ஆகியவற்றை பரப்புவதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. எந்த கட்டணமும் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் தியானம் கற்பித்தல், தியான சக்தியை அதிகரிப்பதற்கு பிரமிட் கட்டுவதின் அவசியம் பற்றி விழிப்புணர்வு உருவாக்குதல், பிரமிட் ஆசிரமங்களுக்கு இலவச தியான நிகழ்ச்சி நடத்துவதற்கு உதவுதல், ஆன்மிகப் புத்தகங்கள் வெளியிடுதல், ஆன்மிகத் தேடல் உள்ளவர்களுக்கு ஆன்மிகப் புத்தகத்தின் பயனை இலவசமாக அளித்தல் இதுவே எங்கள் பணியாகும்.

சுறுசுறுப்பான, புத்திக்கூர்மையான வாழ்க்கை வாழ சைவ உணவுதான் சிறந்தது, எனவே நாங்கள் தியானிகளுக்கும், யோகிகளுக்கும் அன்னதான சேவை செய்வதற்கு ஊக்குவிக்கின்றோம். இதன் மூலமாக இணக்கமான, விழிப்புணர்வோடு கூடிய தனி நபர் மாற்றத்தை உருவாக்கி, அதன்மூலம் உலகளாவிய சுய மாற்றத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம். இந்த ஆன்மிக அறக்கட்டளையில் எங்களுடன் இணையுங்கள். தியானம் செய்து, விழிப்புணர்வு பெற்று, அனைவரும் இணைந்து சிறந்த பூமியை உருவாக்குவோமாக!

## அன்னதானம் ஒரு புனிதமான செயல்

நமது பண்டைய மரபுகளின்படி, அன்னதானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, குறிப்பாக ஆன்மிக ஆர்வலர்கள் மற்றும் அருட்தொண்டர்களுக்கு. அன்னதானத்துடன், தியான தானம், சேவை தானம் மற்றும் ஞான தானம் போன்ற அனைத்து செயல்களும் மிகவும் சிறந்தவையாகும்.

தானங்களில் சிறந்த தானம் அன்னதானம்!

அன்னதானம் என்பது நன்கொடைக்கான தூய்மையான வடிவமாகும்!

இலவச தியான வகுப்புக்கு
**போகர் பிரமிடு தியான மையம்,**
31/A, கவுன்சிலர் தேவராஜனார் தெரு, வேதாச்சலம் நகர்,
செங்கல்பட்டு-603001 | வருகை நேரம்: 6am-8am & 5pm-7pm
தொலைபேசி : 9176500063, 8122828800

Buy Pyramids, Crystals and Spiritual Books online at
**Satyam eStore - www.satyamestore.com**
Read all books written by Patriji online today !
buy your annual membership today !
Phone : 9994005244